# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 12.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12898/SCIC/2023**

திரு S. மயில்சாமி மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம்,
மதுரை மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 24.04.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், திருமங்கலம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். பொதுத் தகவல் அலுவலரின் கடமைகள் மற்றும் முக்கிய பணிகள் குறித்த விவரம், பொதுத் தகவல் அலுவலரின் பணிநியமன ஆணை, கல்வித்தகுதி ஆவணங்கள், சாதி சான்றிதழ், வேலைவாய்ப்பு அலுவலக அட்டை ஆகியவற்றின் நகல்கள், பொதுத் தகவல் அலுவலர் பணியில் சேர்ந்த நாள்

முதல் தற்போது வரையில் அவருடைய மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் சொத்து விவரங்கள் என்பன போன்ற விவரங்களை 11 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் 05.06.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனைத்தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலரால் 05.06.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு அலுவலரால் 19.06.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 17.07.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 12898/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 18.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 26.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 12.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு க. நல்லகுமார், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருமங்கலம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் 05.06.2023, மற்றும் 18.10.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு இனவாரியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 26.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. மனுதாரர் தனது 24.04.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலரால் 05.06.2023 தேதியிட்டு காலதாமதமாக தனக்கு

தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்தகவல்களும் முழுமையற்ற மற்றும் தவறான தகவல்களாக இருப்பதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார்.

6. எனவே, **மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்காத அப்போது பொறுப்பிலிருந்த முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு பாண்டியராஜன், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருமங்கலம் என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஒரு மாதகாலத்திற்குள் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று, ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

7. பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. **அதில் இனம் 2க்கு பொதுத் தகவல் அலுவலரின் பணிநியமன நாள், கல்வித் தகுதி விவரங்கள் மட்டும் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டும். கல்விச்சான்றிதழின் நகல்கள் ஏதும் வழங்கவேண்டியதில்லை. இனம் 6க்கு பொதுத் தகவல் அலுவலர் முதலாவதாக பணியில் சேர்ந்த இடம், பதவியின் பெயர், சம்பள விவரம் ஆகிய விவரங்கள் அனைத்தும் 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கிவிட்டு, அவ்வறிக்கையுடன், மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

8. மனுதாரர் தனது மனுவில் மற்ற இனங்களில் சொத்து விவரங்களை கோரியுள்ளார். அவற்றை வழங்க இயலாது. மேலும் இனம் 8ல் மூன்றாம் நபர் தகவல்களை கோரியுள்ளதால் அவற்றை வழங்க ஆணையத்தால் உத்தரவு பிறப்பிக்க இயலாது என்பதை மனுதாரருக்கு ஆணையம் எடுத்துரைக்கிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 12898/SCIC/2023**

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம்,
மதுரை மாவட்டம்.

திரு பாண்டியராஜன்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

**மனுதாரர்:-**
திரு R. மயில்சாமி,
த/பெ இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை - 18

**நகல்**
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
எண்.100,சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028.

Copy to: File TK/PS